# உடுப்பிட்டி
# அமெரிக்கன் மிஷன்
# கல்லூரி
# பழையமாணவர் சங்கம்
# ஆண்டறிக்கை 1989/90

## உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரி

## பழைய மாணவர் சங்கம்

## இரண்டாவது வருடாந்தப் பொதுக்கூட்டம்

மேற்படி சங்கத்தின் வருடாந்தப் பொதுக்கூட்டம் 1991ம் ஆண்டு ஜனவரி மாதம் 13ம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு கல்லூரி மண்டபத்தில் நடைபெறும் என்பதனை அறியத்தருகின்றோம்.

நிகழ்ச்சி நிரல்.

01) கடவுள் வணக்கம்,
02) தலைவர் உரை.
03) வருடாந்தப் பொதுக்கூட்ட அறிக்கை.
04) 89.07.16 - 90.12.31 வரையிலான ஆண்டறிக்கை.
05) பொருளாளர் வரவு - செலவு அறிக்கை,
06) அதிபர் உரை.
07) முன்னறிவித்தல் கொடுக்கப்பட்ட தீர்மானங்கள் மேல் ஆராய்தல்
08) புதிய ஆண்டிற்கான உத்தியோகத்தர் தெரிவு.
09) புதிய ஆண்டிற்குரிய செயல்திட்டம் தயாரித்தல்,
10) வேறு விடையங்கள்,

உடுப்பிட்டி அ.மி.கல்லூரி,
பழைய மாணவர் சங்கம்,
உடுப்பிட்டி
1991.01.03.

சி. கனகசபாபதி
.......
செயலாளர்

உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரிப் பழைய மாணவர் சங்கத்தின்
முதலாவது வருடாந்தப் பொதுக் கூட்ட அறிக்கை.

திகதி:- 1989.07.16.
நேரம்:- மு.ப 10மணி,
இடம்:- கல்லூரி மண்டபம்,

மேற்படி சங்கக்கூட்டம் மேற்குறிந்த நேரத்தில் ஓய்வு பெற்ற அதிபர் திரு எஸ்.எஸ் செல்லத்துரை அவர்கள் தலைமையில் திரு கா.நீலகண்டன் அவர்களின் கடவுள் வணக்கத்துடன் ஆரம்பமானது. தலைவர் உரையைத் தொடர்ந்து புதிய நிர்வாகசபை உத்தியோகத்தர் தெரிவு ஆரம்பமானது. கீழ்க் குறிப்பிடப்பட்டோர் உத்தியோகத்தவர்களாகவும் அங்கத்தினராகவும் தெரிவு செய்யப்பட்டனர்

உத்தியோகத்தர்கள்,தெரிவு.

| பதவி | பிரேரித்து அனுவதிக்கப்பட்டவர் | பிரேரித்தவர் | அனுவதித்தவர் |
|---|---|---|---|
| தலைவர் : | பேராசிரியர் அ.துரைராஜா | திரு எஸ்.எஸ் செல்லத்துரை, | திரு கா.நீலகண்டன். |
| உபதலைவர்கள்: | திரு தி.யோகசாமி | திரு சி.கனகசபாபதி. | திரு ச.கிருஷ்ணசாமி. |
| | திரு சீ.தியாகராசா. | திரு ச.கிருஷ்ணசாமி. | திரு எஸ்.சின்னத்துரை. |
| செயலாளர்: | திரு சி.கனகசபாபதி. | திரு கா.நீலகண்டன். | திரு தி.யோகசாமி. |
| துணைச்செயலாளர்: | திரு க.தர்மகுலசிங்கம். | திரு கா.நீலகண்டன். | திரு நா.மகாதேவன். |
| பொருளாளர்: | திரு ச.தில்லையம்பலம், | திரு கா.நீலகண்டன். | திரு ச.கிருஷ்ணசாமி. |
| அங்கத்தவர்கள்: | திரு கா.நீலகண்டன் | திரு சி.கனகசபாபதி. | திரு த.விஜயகுமார். |
| | திரு ச.கிருஷ்ணசாமி. | திரு தி.யோகசாமி. | திரு சி.கனகசபாபதி. |
| | திரு பொ.வியாகேசு | திரு தி.யோகசாமி. | திரு செ.விஜயகுமார்த்[illegible] |
| | திரு நா.மகாதேவன். | திரு பொ.வியாகேசு. | திரு த.விஜயகுமார். |
| கணக்குப்பரிசோதகர் | திரு இ.பொன்னம்பலம். | திரு த.சுப்பிரமணியம். | திரு க.திருச்செந்தா[illegible] |

இத்தெரிவுகள் யாவும் சபையோரினால் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப் பட்டு அங்கீகரிக்கப்பட்டது.

தலைவர் உரை:- புதிய உறுப்பினர்கள் தெரிவைத் தொடர்ந்து புதிய தலைவர் பேராசிரியர் திரு அ. துரைராஜா அவர்கள் திரு எஸ்.எஸ் செல்லத்துரை அவர்களிடமிருந்து தலைவர் பதவியை பொறுப்பேற்றுக் கொண்டார் அதைத் தொடர்ந்து தமது தலைமையுரையில் ஒவ்வொரு பாடசாலையின் வளர்ச்சிக்கும் கல்வியின் முன்னேற்றத்திற்கும் பழைய மாணவர் சங்கத்தின் பங்கு மிக அவசியம் எனவும் கல்வியைப் பொறுத்த வரை அரசாங்கத்தையே தனியே நம்பி இருக்க முடியாது எனவும் இப்பணியைத் திறம்படச் செயற்படுத்த பழையமாணவர்களாகிய எல்லோரும் ஒத்துழைக்க வேண்டும் எனவும் கூறினர்.

அதிபர் உரை:- அதைத் தொடர்ந்து தற்போதைய அதிபர் திரு க.சிதம்பரப்பிள்ளை அவர்கள் ஆற்றிய உரையில் பழையமாணவர்கள் இப்பாடசாலையில் காட்டும் ஆர்வம் போதாது என்றும் அதற்கு அவர்களின் இன்றைய வரவு உறுதிப்படுத்துகின்றது எனவும் இதற்கு எமது பாடசாலையின் கடந்தகால நடவடிக்கையும் ஒரு காரண மாகும் எனவும் கூறினர். அத்துடன் பாடசாலையின் தற்போதைய முன்னேற்றங் களையும் பாடசாலையில் உள்ள குறைபாடுகளையும் மிக விபரமாக எடுத்துக் கூறினர்.

வேறு விடயங்கள்:- அடுத்து தலைவர் பணிப்பின் பேரில் அதிபர் கூறிய குறை பாடுகள் பற்றி ஆராயப்பட்டது, முதல் குடிநீர் பிரச்சனை எடுத்துக் கொள்ளப் பட்டபோது பாடசாலை வளவில் எப்பகுதியிலும் நன்னீர் கிடையாது என திரு பொ.வியாகேசு அவர்கள் சுற்றிவர அமைந்துள்ள கிணறுகளின் புள்ளி விபரங் களுடன் எடுத்துக் கூறினர். அதற்கு திரு ச.கிருஷ்ணசாமி அவர்கள் பாடசாலை யின் எதிரில் உள்ள கோயில் கிணற்றிலிருந்து நீர் எடுக்க ஆவன செய்ய வேண்டும் எனவும், இல்லையேல் பாடசாலை விளையாட்டு மைதானத்தில் இருந்து எடுக்க லாம் எனவும் கூறினர். அதற்கு சபையோர் விளையாட்டு மைதானத்தில் இருந்து எடுப்பதே சிறந்த வழி எனத் தீர்மானித்தனர்.

அடுத்து பாடசாலையின் பிள்ளைகள் வரவுக்குறைவுபற்றி ஆராயப்பட்டது அப்பொழுது திரு எஸ்.சுப்பிரமணியம் அவர்கள் தற்போதைய நாட்டு நிலைமை இதற்கு ஒரு காரணம் எனவும் அடுத்தது குறைவான பிள்ளைகள் பாடசாலைக்கு வரும் நாட்களில் வகுப்புகள் முழுமையாக இயங்காததுமே காரணமாகும் எனவும், எனவே ஓரிரு பிள்ளைகள் வகுப்பிற்கு வந்தாலும் வகுப்பை முழுமையாக இயங்கப்பண்ணினால் வரவு படிப்படியாக முன்னேறும் எனக் கூறினர். அதற்கு அதிபர் அவர்கள் அவ்வழி யையே தற்பொழுது தான் கைக்கொள்வதாகக் கூறினர்.

அடுத்து நிதி சம்பந்தமாக ஆராயப்பட்ட போது இது விடயமாக நிர்வாக சபைக் கூட்டத்தில் ஆராய்ந்து நடைமுறைப்படுத்தப்பட வேண்டும் என சபையில் தீர் மானிக்கப்பட்டது. அடுத்து இப்பொதுக்கூட்டத்தைத் தொடர்ந்து நிர்வாகசபைக் கூட்டம் நடைபெறும் என தலைவர் பணித்து திரு கா.நீலகண்டன் அவர்களை நன்றி உரை ஆற்றுமாறு கேட்டுக்கொண்டார்.

திரு கா.நீலகண்டன் அவர்களின் நன்றி உரை(பூடன்) கூட்டம் மு.ப 11மணி யளவில் முடிவுற்றது.

(ஒப்பம்) சி. கனகசபாபதி
செயலாளர்

## உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரிப்
## பழைய மாணவர் சங்கம்

### 1989-1990ம் ஆண்டுகளுக்கான நிர்வாகசபை உத்தியோகத்தர்கள்.

தலைவர்:- பேராசிரியர் திரு அ. துரைராஜா.

உபதலைவர்கள்:- திரு தி. யோகசாமி.
திரு சீ. தியாகராசா.

செயலாளர்:- திரு சி. கனகசபாபதி.

உபசெயலாளர்கள்:- திரு க. தர்மகுலசிங்கம். (1989.07.16-1990.02.08வ
திரு பொ.வியாகேசு- (1990.02.18-1990.01.13வரை)

பொருளாளர்:- திரு ச. தில்லையம்பலம்.

உறுப்பினர்கள்:-
திரு கா. நீலகண்டன்.
திரு ச. கிருஷ்ணசாமி.
திரு தா. மகாதேவன்.
செல்வி சீ. வேலுப்பிள்ளை.

## உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரி
## <u>பழைய மாணவர் சங்கம்.</u>

1989-1990ம் ஆண்டுகளுக்கான நிர்வாகசபைக் கூட்டங்களுக்கு அங்கத்தவர்களின் வரவு விபரம்:-

| பெயர் | நடைபெற்ற கூட்டங்களின் எண்ணிக்கை | பங்குபற்றிய கூட்டங்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| பேராசிரியர் திரு அ.துரைராஜா. | 17 | 16 |
| திரு தி.யோகசாமி. | 17 | 17 |
| திரு சீ.தியாகராசா. | 17 | 05 |
| திரு சி.கனகசபாபதி. | 17 | 15 |
| திரு பொ.வியாகேசு. | 17 | 12 |
| திரு ச.தில்லையம்பலம். | 17 | 15 |
| திரு கா.நீலகண்டன். | 17 | 12 |
| திரு ச.கிருஷ்ணசாமி. | 17 | 07 |
| திரு நா.மகாதேவன். | 17 | 08 |
| திரு க.தர்மகுலசிங்கம். | 08 | 02 |
| செல்வி சீ.வேலுப்பிள்ளை. | 15 | 09 |

(ஒப்பம்) சி.கனகசபாபதி
செயலாளர்

# உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரி
# பழைய மாணவர் சங்கம்.

## 1989.07.16 -1990.12.31 வரையிலான ஆண்டறிக்கை.

இச்சங்கத்தின் வருடாந்த அறிக்கையைச் சபைக்குச் சமர்ப்பிப்பதை இட்டு பெருமையும் மகிழ்ச்சியும் அடைகிறேன்.

உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரி தகர்க்கப்பட்டு, சிதைக்கப்பட்டு அழிந்து போய்க்கொண்டிருந்த நிலையில் இக் கல்லூரியைப் பழைய நிலைக்கு மேம்படுத்த வேண்டும் என்ற ஆவலில் அதிபர் க. சிதம்பரப்பிள்ளை அவர்களினதும் மற்றும் சில பழைய மாணவரினதும் முயற்சியினால் சிறிது காலம் இயங்காமலிருந்த பழைய மாணவர் சங்கத்தைப் புத்துயிர் அளித்து, மீண்டும் 1989.07.16ம் திகதி புனரமைத்து இயங்கப்பண்ணியமை போற்றுதற்குரிய விடயமாகும்.

புதிய தலைவர் பேராசிரியர் திரு அ.துரைராஜா அவர்களின் தலைமையின் ( ) இந் நிர்வாகம் திறம்பட இயங்கி, கல்லூரியை முன்னேற்றும் என்ற முன்னாள் அதிபர் திரு. எஸ்.எஸ்.செல்லத்துரை அவர்களின் கூற்றுக்கொப்ப தற்போதைய போர்க்கால நிலையிலும் நிர்வாகம் பல முன்னேற்றகரமான நடவடிக்கைகளை மேற்கொண்டது.

01) நிர்வாகசபைக் கூட்டங்கள்:- மாதந்தம் குறைந்தது ஒரு நிர்வாகசபைக் கூட்டமேனும் நடைபெற வேண்டும் என்ற அடிப்படையில் குறித்த கால எல்லையில் 17 நிர்வாகசபைக்கூட்டங்கள் நடைபெற்றன. உறுப்பினர்களின் பங்களிப்பும் வரவும் திருப்திகரமாக இருந்தது.

02) சங்க யாப்பு:-

எமது கல்லூரியில் கடந்த காலங்களில் பெண்களும் கல்வி கற்றிருந்தமையால் அவர்களையும் பிரதிபலிக்கும்படி சங்கத்திற்கு

"UDUPPIDDY AMERICAN MISSION COLLEGE PAST PUPILS ASSOCIATION"

என்றநாமத்தை இட்டு அதற்கென்று ஓர் திருத்தியயாப்பினையும் வகுத்து அங்கத்தவர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

03) அங்கத்தவர்கள்:-

இக்கால எல்லையில் 83 பேர் ஆயுட்கால அங்கத்தவர்களாகச் சேர்ந்துள்ளார்கள். அங்கத்தவர்களைச் சேர்க்கும் பணியில் எல்லா உறுப்பினர்களும் உற்சாகமாகச் செயற்பட்டு இருந்தால் இன்னும் கூடிய அங்கத்தவர்களைச் சேர்த்திருக்கலாம். தற்போதைய அரசியல், பொருளாதார நெருக்கடிகளால் அங்கத்தவர்களைச் சேர்க்கும் பொருட்டுப் புதிய திட்டங்கள் எதுவும் மேற்கொள்ளப்படவில்லை.

04) கிளைச்சங்கங்கள்:-

பரந்து வாழும் எமது பழைய மாணவர்களை ஒருங்கிணைத்து அவர்களிடையே பிணைப்பையும் அந்நியோன்னியத்தையும் ஏற்படுத்தும் முகமாகக் கிளைச்சங்கங்கள் அமைக்கவேண்டும் என்ற அவசியத்தை உணர்ந்த திருவாளர் த.வசந்தகுமார், வ.சொர்ணலிங்கம் ஆகியோர் எடுத்த பெருமுயற்சியின் பயனாகக் கனடாவில் கிளைச்சங்கம் ஒன்று உருவாக்கப்பட்டது.

திருமதி நிர்மலா விஜயகுமார் அவர்கள் லண்டனில் கிளைச்சங்கம் ஆரம்பிக்க நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறார்.

திருவாளர் இ.முத்துரத்தினைந்தன் அவர்கள் கொழும்பில் கிளைச்சங்கம் ஆரம்பிக்கச் சகல நடவடிக்கையும் எடுத்து வரும் வேளையில் நாட்டில் ஏற்பட்ட அரசியல் நெருக்கடி காரணமாக பின்போட வேண்டியதோர் நிலமை ஏற்பட்டது.

05) கனடாக் கிளைச்சங்கம்:-

கலாநிதி திரு த.வசந்தகுமார் அவர்களைத் தலைவராகவும் திரு வ. சொர்ணலிங்கம் அவர்களைச் செயலாளராகவும், திரு எம். திரு எம்.பாஸ்கரன் அவர்களைப் பொருளாளராகவும் கொண்ட கிளைச் சங்கம் ஆரம்பிக்கப்பட்டது. இச்சங்கம் தாய்ச்சங்கத்திற்கு ஆற்றிவரும் உதவி மிக மகத்தானதும் போற்றுதற்குரியதுமாகும்.

அவர்கள் ஆற்றிவரும் உதவிகளாவன :-

அ) வசதிப்பண ஆசிரியர்களுக்கு கல்லூரி வழங்கும் ரூபா 250/- ஐ விட சகாயப்பணமாக மாதாந்தம் தலா ரூபா 500/- மேலதிகமாக வழங்க முன்வந்தார்கள் அதன் பிரகாரம் யூலை 89இலிருந்து செப்ரம்பர் 90வரையிலான கால எல்லைக்குள் ரூபா 45 5000/-ஐ வழங்கியுள்ளார்கள் ஒக்ரோபர் 90 டிசம்பர் 90 வரையிலான கால எல்லைக்குரிய சகாய நிதி வசதிப் பண ஆசிரியர்களுக்கு அடுத்த ஆண்டு வழங்குவதெனத் தீர்மானிக்கப்பட்டது.

| காலம் | மாதஎண்ணிக்கை | ஆசிரியர் தொகை | வீதம் | வழங்கப்பட்ட தொகை |
|---|---|---|---|---|
| யூலை89-டிசம்பர் 89 | 06 | 10 | ரூ350/- | ரூ21,000/- |
| ஜனவரி90-மார்ச் 90 | 03 | 08 | ரூ500/- | ரூ12,000/- |
| மே 90-செப்ரெம்பர்90 | 05 | 05 | ரூ500/- | ரூ12,500/- |
| | | | தொகை | ரூ45,500/- |

ஆ) வருடாவருடம் க.பொ.த(சா/த), க.பொ.த(உ/த), விளையாட்டுத்துறை ஆகியவற்றிலிருந்து திறமையானமாணவர் ஒவ்வொருவரைத் தெரிவு செய்து, அவர்களுக்கு தலா ரூபா1000/- பிரகாரம் வருடம் ரூபா3000/- வழங்கும் பெருநோக்குடன் ரூபா30,000/- ஐ தேசிய சேமிப்பு வங்கியில் நிரந்தர வைப்பில் இடப்பட்டுள்ளது.

1990ம் ஆண்டிற்கான பரிசில்களுக்குரிய மாணவர்கள் நாட்டின் தற்போதைய குழப்பநிலை காரணமாக இடம்பெயர்ந்துள்ளதாலும் விழா வைத்து வழங்கமுடியாததனாலும் இக்கால எல்லையில் வழங்கமுடியாது பின்போடப்பட்டுள்ளது.

இ) கல்லூரியின் விஞ்ஞானகூடம் நவீன முறையில் அமைப்பதற்குத் தேவையான நிதியின் ஒரு பகுதியாக ரூ75,000/- இவர்களால் அனுப்பப்பட்ட நிதியிலிருந்து தேசிய சேமிப்பு வங்கியில் நிரந்தர வைப்பிலிடப்பட்டுள்ளது.

06) சந்தாப்பணம்:-

சங்கயாப்பின் பிரகாரம் அங்கத்தவர்களான 83பேரிட மிருந்தும் வசூலித்த சந்தாப்பணம் ரூபா8,300/- இலங்கை வங்கி பருத்தித்துறைக் கிளையில் சேமிப்புக் கணக்கில் வைப்பிலிட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

07) குடிநீர் விநியோகத்திட்டம்:-

கல்லூரி விளையாட்டு மைதானத்திலிருந்து இதுவரை காலமும் பெறப்பட்ட குடிநீர், உவர்நீராக மாறியதை இட்டு வேறேர் வசதியை ஏற்படுத்த வேண்டிய நிர்ப்பந்தம் உண்டாயிற்று, இம்மைதானத்திற்கருகிலுள்ள "முதலையினர் கிணற்றடி" என்ற காணியிலிருந்து புதிதாக ஒரு சிறு தோண்டு வதற்கு ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளது, இதற்கு வேண்டிய நிதியுதவியாக ரூபா50,000/-ஐ வழங்க"சர்வோதயம்" முன்வந்தது. இத்திட்டம் பரிபூரணமாக செயற்படுத்த முடியாமைக்கு பாதகமான அரசியல் சூழ்நிலையே காரணம் என்பதனை இங்கு சுட்டிக்காட்டத் தேவையில்லை.

ஏலவே அமைத்திருந்த குடிநீர் விநியோகக் குழாய்கள் சில பொறுப் பற்றவர்களால் துஷ்பிரயோகம் செய்யப்பட்டுள்ளமையால் அதை மீண்டும் சீர் அமைத்துச்செயற்படுத்துவதற்கு வேண்டிய நிதி ஒதுக்கப்பட வேண்டிய நிலையிலுள்ளது.

08) விளையாட்டு மைதானம் திருத்திச்செப்பனிடப்பட்டது.

அதிபரின் வேண்டுகோளின் பிரகாரம் கல்லூரி விளையாட்டு மைதானம் ரூபா 3,000/- செலவில் மட்டப்படுத்தப்பட்டது.

09) கல்லூரி இல்ல விளையாட்டுப் போட்டி :-

விளையாட்டு உபகரணங்கள் சகலதும் இழந்த நிலையில் கல்லூரி இல்ல விளையாட்டுப் போட்டி நடாத்தத் தீர்மானித்த போது இவ் விளையாட்டுப் போட்டியைத் திறம்பட நடத்த உதவும் பொருட்டு, ரூபா 10,000/- உதவியாகப் பழைய மாணவர் சங்கத்தால் வழங்கப்பட்டு, இல்ல விளையாட்டுப் போட்டி சிறப்பாக நடந்தேறியது.

இதில் கடைடாக்சிளேச்சங்கத்தின் சார்பாகக்கேடயம் ஒன்றும்வழங்கப்பட்டது.

10) போர்க்காலக்கல்வித்திட்டம் :-

அ) பாடசாலை நடத்தமுடியாத ஆபத்தான சூழ் நிலை நிலவிய காலத்தில் குறைந்த பட்சம் கீழ் வகுப்பு மாணவர்களுக்கேனும் கல்வி வசதியை அளிக்கும் நோக்குடன் ஊர்தோறும் அந்தந்த ஊர்ப்பிள்ளைகளுக்கான வகுப்புகள் நடாத்தப்பட்டன.

ஆ) எமது கல்லூரி அதற்குரிய வளவினுள் இயங்கக்கூடிய சாதகமான சூழ்நிலை அற்றமையால் எமது விளையாட்டு மைதானத்தில் கொட்டில்கள் அமைத்து இயக்க வேண்டிய நிர்ப்பந்தத்திற்கு உள்ளாகியிருக்கிறது. அதற்கு ஏற்படும் செலவினங்களில் ஒரு பகுதியாக ரூபா10,000/- வழங்கச்சங்கம் தீர்மானித்துள்ளது.

11) வருடாந்தப் பொதுக்கூட்டம் :-

1990.06.17ம் திகதி நடைபெற்ற நிர்வாகசபைக் கூட்டத்தில் வருடாந்தப் பொதுக்கூட்டம் 1990ம் ஆண்டு ஆவணி மாதம் கதம்ப நிகழ்ச்சிகளுடன் சிறப்பான முறையில் நடாத்துவதெனத் தீர்மானிக்கப்பட்டிருந்தது. ஆனல் அதன் பின் உண்டான அரசியல் நெருக்கடியால் நாட்டின் பாதுகாப்பின்மை ஏற்பட்ட காரணத்தால் கூட்டம்

காலவரையறையின்றி பின் போடப்பட்டது. தற்சமயம் நிலைமை சற்றுத் தணிந்து வருவதனால் கூட்டத்தை மிக எளிமையான நிலையில் 1991ம் ஆண்டு ஜனவரியில் நடத்துவதென 1990.12.16ம் திகதி நடைபெற்ற நிர்வாக சபைக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டதற்கிணங்க கூட்டம் நடைபெறுகிறது.

12) <u>புதிய கட்டிடங்கள் :-</u>

எமது கல்லூரிக்குரிய புதிய கட்டிட ஒப்பந்தகாரர் ஸ்ரீதரன் - கொம்பனிக் கட்டிட அமைப்பில் சில குறைபாடுகளைச் செய்ததுடன் குறிப்பிட்ட கால எல்லைக்குள் கட்டிடங்கள் முடியாமையாலும் சில கட்டிடங்களைக் கட்டத் தொடங்காமையாலும் கல்வித் திணைக்களத்திற்கு முறைபாடு செய்தமையால் அவரின் ஒப்பந்தம் நிறுத்தப்பட்டது

அதன் பின் எடுத்த ஒப்பந்தக்காரர் போர்க்கால நடவடிக்கைகள் ஏற்பட்ட நிர்வாகச் சீர் குலைவு, பாதுகாப்பின்மை போன்ற காரணங்கள் கட்டிடத்தைத் தொடங்க முடியாமற் போய்விட்டது.

(ஒப்பம்) சி. கனகசபாபதி
.....செயலாளர்.....

விசேட நன்கொடைகள் வழங்கிய பழைய மாணவர்களின் விபரம்:-

| | | |
|---|---|---|
| 1) | திரு பா. மாணிக்கவாசகர் (அவுஸ்திரேலியா) | ரூ. 5000.00 |
| 2) | திரு வீ. விஜயரத்தினம் (டென்மார்க்) | ரூ. 1900.00 |
| 3) | திரு பா. வல்லிபுரநாதன் (கனடா) | ரூ. 5000.00 |
| 4) | திருமதி க. மகாதேவன் (அமெரிக்கா) | ரூ. 15000.00 |
| | மொத்தம் | 26900.00 |

கனடாப்பழைய மாணவர் சங்கத்திடமிருந்து பெற்ற நன்கொடை விபரம்:-

| | | |
|---|---|---|
| 1) | வங்கிக்கூற்று (31தை 1990)ப்படி $3000 | ரூ.99000.00 |
| 2) | " " (28மாசி1990)ப்படி $1000 | ரூ.32615.00 |
| 3) | " " (30சித்திரை1990)ப்படி $1000 | ரூ.33922.00 |
| | மொத்தம் | ரூ.165537.00 |

1990ம் ஆண்டு இல்ல விளையாட்டுப்போட்டி நடாத்துவதற்கென
<u>பழைய மாணவர் நன்கொடை.</u>

| | | |
|---|---|---|
| 01) | பேராசிரியர் அ. துரைராசா. | ரூ. 1000.00 |
| 02) | பேராசிரியர் ஆர். மகேஸ்வரன். | ரூ. 1000.00 |
| 03) | திரு கே. நல்லையா. | ரூ. 1000.00 |
| 04) | திரு சி. கனகசபை. | ரூ. 500.00 |
| 05) | திரு அ. கருணைவேல். | ரூ. 500.00 |
| 06) | திரு இ. முத்துரத்தினநந்தன். | ரூ. 250.00 |
| 07) | திரு எஸ். கிருஸ்ணசாமி. | ரூ. 100.00 |
| 08) | திரு சீ. தியாகராசா. | ரூ. 100.00 |
| 09) | திரு என். நவனேசன். | ரூ. 100.00 |
| 10) | திரு கே. தேவமனோகரன். | ரூ. 100.00 |
| 11) | இரஜனி பீடா | ரூ. 100.00 |
| 12) | திரு விஜயரட்ணம் | ரூ. 50.00 |
| 13) | திரு எஸ். இரவீந்திரநாஸ். | ரூ. 50.00 |
| | மொத்தம் | 4850.00 |

1990ம் ஆண்டு இல்ல விளையாட்டுப்போட்டிக்கு ஆசிரியர்களின்
<u>நன்கொடை.</u>

| | | |
|---|---|---|
| 01) | திரு க. சிதம்பரப்பிள்ளை. | ரூ. 100.00 |
| 02) | திரு க. முத்துவேலு. | ரூ. 75.00 |
| 03) | திரு பூ. சக்திவேல். | ரூ. 50.00 |
| 04) | திருமதி எஸ். பாலேந்திரன். | ரூ. 50.00 |
| 05) | திரு க. சோமசுந்தரம். | ரூ. 50.00 |
| 06) | திரு இ. பொன்னம்பலம். | ரூ. 50.00 |
| 07) | திரு பி. சின்னத்தம்பி. | ரூ. 50.00 |
| 08) | செல்வி சி. கணேஷன். | ரூ. 50.00 |
| 09) | செல்வி பொ. உமாகுமாரி. | ரூ. 50.00 |
| 10) | திரு ச. தில்லையம்பலம். | ரூ. 100.00 |
| 11) | திரு கா. நீலகண்டன். | ரூ. 50.00 |
| 12) | திரு வி. வேலாயுதன். | ரூ. 50.00 |
| 13) | திரு க. திருச்செந்தூர். | ரூ. 50.00 |
| 14) | திருமதி க. சேனாதிராசா. | ரூ. 100.00 |
| 15) | திருமதி ஆர். மகாரத்தினம். | ரூ. 50.00 |
| | மொத்தம் | 925.00 |

உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரிப் பழைய மாணவர் சங்கம்

நிதியாண்டு 1989யூலை---1990 மே வரைக்கான வரவு செலவுக் கணக்கு.

| வரவு | வரவு | ரூபா | ச |
|---|---|---|---|
| 1) | பழைய மாணவர் சங்கம் (கனடா) நன்கொடை (3கட்டங்களில்) | 165537 | 00 |
| 2) | வெளிநாட்டுப் பழைய மாணவர்கள் நன்கொடை | 20000 | 00 |
| 3) | விளையாட்டுப் போட்டி நடாத்துவதற் கென உள்ளூர் பழைய மாணவர்கள் நன்கொடை | 4850 | 00 |
| 4) | சீவிய கால அங்கத்துவப்பணம் | 7900 | 00 |

செலவு

| | | ரூபா | ச |
|---|---|---|---|
| 1) | வசதிக்கட்டண ஆசிரியர்களுக்கு - சகாயப் படி | .32500 | 00 |
| 2) | அதிபருக்கு உதவிப்பணமாக (விளையாட்டுப்போட்டி நிகழ்த்த) | 10000 | 00 |
| 3) | உடுப்பிட்டி பெண்கள் கல்லூரி பழைய மாணவியர் சங்கத்திற்கு (கனடா மாணவர் சங்கத்தின் அறிவுறுத்தலின்படி) | 25000 | 00 |
| 4) | விளையாட்டு மைதானம் மட்டமாக்கல் | 3000 | 00 |
| 5) | காகிதாதிகள் - அச்சிடல் | 2246 | 50 |
| 6) | தபால் செலவு | 168 | 50 |
| 7) | கூட்ட நிகழ்ச்சிகளின் போது குளிர் பானம் | 104 | 50 |
| 8) | இலங்கை வங்கியில் கழிவு | 26 | 25 |
| | மொத்தச் செலவு | 73045 | 75 |
| | கையில் பணமாக இருப்பு | 580 | 50 |
| | தேசிய சேமிப்பு வங்கியில் பணவைப்பு | 50 | 00 |
| | தேசிய சேமிப்பு வங்கியில் நிலையான வைப்பு (மாணவரின் சிறப்புப்பரிசில்களுக்கு) | 30000 | 00 |
| | இலங்கை வங்கி மீதி (31 மே 1990) | 94610 | 75 |

| வரவு | செலவு |
|---|---|
| 198287 00 | 198287 00 |

(ஒப்பம்) ச. தில்லையம்பலம்

தனாதிகாரி

உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரிப் பழைய மாணவர் சங்கம்

யூன் 1990 தொடங்கி டிசம்பர் 1990 வரைக்கான வரவுசெலவுக் கணக்கு.

வரவு

| | | ரூபா ச |
|---|---|---|
| 1) | பழைய மாணவர் (வெளிநாட்டு) நன்கொடை | 6900 00 |
| 2) | விளையாட்டுப் போட்டி நிகழ்த்துவதற்காக ஆசிரியர்களின் நன்கொ | 925 00 |
| 3) | சீவிய கால அங்கத்துவப் பணம் | 400 00 |
| 4) | யூன் 1ம் திகதி கையில் பணமாக இருந்தது | 580 50 |
| 5) | யூன் 1ம் திகதி இலங்கை வங்கியில் மீதியாக இருந்தது | 94610 75 |
| 6) | தேசிய சேமிப்பு வங்கியில் நிலையான வைப்பு (முந்திய நிதி ஆண்டில்) | 30000 00 |
| 7) | தேசிய சேமிப்பு வங்கியில் பணவைப்பு | 50 00 |

செலவு

| | | ரூபா ச |
|---|---|---|
| 1) | வசதிக்கட்டண ஆசிரியர்களின் சகாயப்பணம் | ..13000 00 |
| 2) | கனடாப்பழைய மாணவர் சங்கத்திற்காக திரைச்சீலை தயாரிப்புக்கும் பாடசாலைக் கீதத்தை நாடாவில் ஒலிப்பதிப்பித்தற்குமான செலவு | 1001 50 |
| 3) | குளிர் பானங்களுக்கு | 67 50 |
| 4) | செக்புத்தகத்திற்கான கழிவு | 26 25 |
| | மொத்தச் செலவு | 14095 25 |
| | டிச 31ம் திகதி கையில் பணமாக இருப்பு | 736 50 |
| | " " இலங்கை வங்கியில் | 13584 50 |
| | தேசிய சேமிப்பு வங்கியில் நிலையான வைப்பு | 75000 00 |
| | தேசிய சேமிப்பு வங்கியில் நிலையான வைப்பு (முந்திய நிதி ஆண்டில்) | 30000 00 |
| | தேசிய சேமிப்பு வங்கியில் பண வைப்பு | 50 00 |

| வரவு மொத்தம் | செலவு மொத்தம் |
|---|---|
| 133466 25 | 133466 25 |

(ஒப்பம்)

## உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரிப் பழைய மாணவர் சங்கம்

1989 யூலை தொடக்கம் 1990டிசம்பர் 31ம் திகதி வரைக்கான **வரவு செலவுக் கணக்கு.**

| | | | |
|---|---|---|---|
| | **வரவு** | | |
| 1) | பழைய மாணவர் சங்கம் (கனடா) நன்கொடை | ரூ. 165,537.00 | |
| 2) | வெளிநாட்டுப்பழைய மாணவர்கள் நன்கொடை | 26,900.00 | |
| 3) | விளையாட்டுப் போட்டி நடாத்துவத தற்கு உள்ளூர்ப்பழைய மாணவர்கள் நன்கொடை | 4,850.00 | |
| 4) | விளையாட்டுப் போட்டி நடாத்துவ தற்கு ஆசிரியர்களின் நன்கொடை | 925.00 | |
| 5) | சீவியகால அங்கத்துவப் பணம் | 8,300.00 | ரூ.206,512.00 |
| | **செலவு** | | |
| 1) | வசதிக்குட்டன ஆசிரியர்களுக்குச் சகாயப் படி | ரூ. 45,500.00 | |
| 2) | அதிபருக்கு உதவிப்பணம் (விளையாட்டுப்போட்டி நடத்த) | 10,000.00 | |
| 3) | உடுப்பிட்டிபபெண்கள் கல்லூரிப் பழைய மாணவிகள் சங்கத்திற்கு (கனடா சங்கத்தின் அறிவுறுத்தல்படி) | 25,000.00 | |
| 4) | விளையாட்டு மைதானம் மட்டமாக்க | 3,000.00 | |
| 5) | கனடாப்பழைய மாணவர் சங்கத்திற் காக "பானர்" சீலை தயாரிக்கவும் பாடசாலைக் கீத ஒலிப்பதிவுக்கும் | 1,001.50 | |
| 6) | காகிதாதிகள் - அச்சிடல் | 2,246.50 | |
| 7) | குளிர் பானம் (கூட்டநிகழ்ச்சிகளில்) | 172.50 | |
| 8) | தபால் செலவு | 168.50 | |
| 9) | வங்கிக்கழிவு | 52.50 | ரூ. 87,141.00 |
| | **கையிருப்பு** | | |
| | 90 டிசம்பர் 31இல் கையில்பணமாக | 736.50 | |
| | இலங்கை வங்கியில் | 13,548.50 | |
| | தேசிய சேமிப்பு வங்கியில் | 105,050.00 | ரூ.119,371.00 |
| | | | 206,512.00 |

(ஒப்பம்) ச. தில்லையம்பலம்
பொருளாளர்

I have examined the Income and Expenditure Account for the period from July 1989 to DEcember 31st 1990, with the Books and Accounts of Uduppiddy American Mission College Past Pupils Association and certify that the Income and Expenditure Account for the period from July 1989 to December 31st 1990 is in accordance with the Books and the information given to me.

A.M.College,
Uduppiddy,
2 Jan.1991.

Internal Auditor of the Past
Pupils Association.